
## திராவிடத்தால் வாழ்கிறோம்

859

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

14

# அரிட்டாபட்டி காத்த கழகத் தலைவர்!



**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

தமிழ்நாட்டின் மதச் சிறுபான்மைச் சமூகங்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சமணர்கள். மற்ற சிறிய இனக்குழுக்கள், மதச் சிறுபான்மையினர், மொழிச் சிறுபான்மையினரைக் காட்டிலும் நீண்டதொரு வரலாற்றுப் பின்னணி சமணர்களுக்கு உள்ளது. ஆரிய படையெடுப்புக்கு முன்பே இருந்த திராவிடர்களின் சமயம்தான் சமணம். சமண சமயம் ஆன்மாவில் நம்பிக்கையற்றது. இயங்கு பொருள் சார்ந்த செயற்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக ‘சமணர்கள்’ இருந்தனர்.

“புத்த மதத்தைப் போலவே, கி.மு. 5, 6-ஆம் நூற்றாண்டில் இன்றைய பீகார் மாநிலத்தில் தோன்றியது சமணம். தொடக்கக் காலத்திலேயே வட இந்தியா முழுவதும் வீச்சாகப் பரவிய சமண சமயம், மெல்ல மெல்ல அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் தெற்கு நோக்கியும் பரவத் தொடங்கியது. ஆனால், இன்று சமணர்கள் இந்திய மக்கள்தொகையில் சுமார் 0.4% மட்டுமே உள்ளனர். அவர்களும் பல மாநிலங்களில் சிதறிக் கிடக்கின்றனர்.

இதில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 0.12% ஆக சமணர்கள் உள்ளனர். அதாவது 89,265 சமணர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் முதலில் சமணம் தோன்றிய இடம் மதுரை. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் மட்டும் சுமார் 30,000 பேர் உள்ளனர். அதேபோல வட மாநில சமணர்களும் (ஜெயினர்கள்) தமிழ்நாட்டின் பல பகுதிகளில் குடியேறியுள்ளனர். கிறிஸ்தவம், இஸ்லாமியம், பார்சி, சிந்து, சீக்கிய சமூகம் உள்ளிட்ட சிறுபான்மைச் சமூக பட்டியலில் சமணர்களும் உள்ளனர்.

### சமணர்களின் இலக்கியம்

தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளாகவும் தமிழ் சமணர்கள் திகழ்ந்தனர். தமிழில், ஐம்பெரும் காப்பியங்களைப் படைத்தவர்களில் பெரும்பாலானோர், சமணர்கள்தான். திருத்தக்கதேவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் உள்ளிட்ட இலக்கிய முன்னோடிகள் பலரும் சமணர்களே. தத்துவம், இலக்கியம், கலை, பழங்கால மருத்துவம் போன்ற துறைகளில் சமண அறிஞர்கள், கலைஞர்கள் தமிழுக்குத் தொண்டு செய்துள்ளனர்.

‘சமணர்களின் இலக்கணம் இல்லா இலக்கியம், தமிழ் இலக்கியத்தின் வெற்றிடம்’ என முத்தமிழறிஞர் கலைஞரே குறிப் பிட்டுள்ளார். அத்தகைய பெருமைக்குரிய சமணர்கள் வாழ்ந்த குகைகள், படுக்கைகள், கோயில்கள், புடைப்புச் சிற்பங்கள், வடக்கிருந்து உயிர் துறந்தவர்கள் குறித்த கல்வெட்டுகள், சமணப்பள்ளிகள், குகைகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட மருந்துக்குழிகள், சமணப் பெண் துறவிகளுக்கென்று தனியாக இயங்கிய சமணப்பள்ளி, சிதிலமடைந்த சிற்பங்கள் என்று சமணர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்ததற்கான 464 அடையாளங்கள் கடைசிப் பத்தாண்டுகளில் கிடைக்கப் பெற்றுள்ளன.

இன்றும் சமணர்கள் வாழும் 150 கிராமங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மற்ற சமூகத்தினரைப் போல அவர்களும் விவசாயம், தொழில் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். கல்வி, வேலைவாய்ப்புகளுக்கும் செல்லத் தொடங்கி விட்டனர்.

### சமண பண்பாட்டு மையம்

இவர்களின் வரலாற்றுக்கு வலுசேர்க்கும் வகையிலும், தமிழ்நாட்டின் புத்த மற்றும் சமண பண்பாட்டுச் சிறப்புகளை நிலைநிறுத்தும் வகையிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ‘புத்த பண்பாட்டு மையம்’ மற்றும் மதுரை மாவட்டத்தில் ‘சமண பண்பாட்டு மையம்’ அமைக்கப்படும் என்று திராவிட மாடல் அரசு, நடப்பாண்டுக்கான சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

இதைவிடக் குறிப்பாக, 2,200 ஆண்டு கால சமண வரலாற்றை அழித்தொழிக்கும் சதித்திட்டம் ஒன்றையும் திராவிட மாடல் அரசு தடுத்திருக்கிறது. மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க, ஒன்றிய அரசு ‘வேதாந்தாவின் இந்துஸ்தான் ஜிங்க்’ நிறுவனத்துக்கு ஏலம் விட்டது. இதை எதிர்த்து, அப்பகுதி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். பசுமையான நிலப்பரப்பு சூழ்ந்த பகுதி அரிட்டாபட்டி. அதனாலோ அல்லது தங்கள் வாழ்வாதாரம் பறிபோகிறது என்பதாலோ மட்டுமல்ல, அந்தப் போராட்டம். 2,200 ஆண்டுகால வரலாறு, அரிட்டாபட்டியில் புதைந்து கிடக்கிறது.

முன்னரே கூறியபடி, தமிழ்நாட்டில் சமணம் கால்பதித்த முதல் இடம் மதுரை. குறிப்பாக, 7 குன்றுகளைக் கொண்டுள்ள அரிட்டாபட்டியில் அரிதான, வித விதமான சமணப் படுக்கைகள் உள்ளன. இங்குள்ள மலைக்குகைகளில் சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். 7-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மகாவீரர் சிற்பம் உள்ளிட்ட சமண சிற்பங்களும் உள்ளன. தமிழ் பிராமி மற்றும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன.

### அரிட்டாபட்டி சுரங்கம்

அதனால், ‘டங்ஸ்டன் சுரங்கம்’ அமையப் பெற்றால், இரண்டாயிரம் ஆண்டுகால சமண வரலாறு படுகுழியில் தள்ளப்பட்டுவிடும் என்ற அச்சம், அரிட்டாபட்டி மக்களிடம் மேலோங்கி இருந்தது. அதை உணர்ந்துதான் ‘டங்ஸ்டன் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்’ என்று உறுதியளித்தார் நமது திராவிட மாடல் நாயகர்.

“நான் உயிரோடு இருக்கும் வரை, டங்ஸ்டன் சுரங்கத்தை அனுமதிக்க மாட்டேன்” என்று சட்டப் பேரவையிலேயே ஆணித்தரமாகக் கூறினார் முதலமைச்சர். அதை அரிட்டாபட்டி மக்கள் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆனால், கனிம வளங்கள் திருத்தச் சட்டத்திற்கு நாடாளு மன்றத்தில் ஆதரவளித்து விட்டு வந்து, தமிழ்நாட்டில் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராக இருப்பது போல நாடகமாடியது அ.தி.மு.க. அரிட்டா பட்டி மக்களின் எதிர்ப்பும், அவர்களுக்கு உறுதுணையாக நின்ற தி.மு.கழக அரசின் உறுதி யாலும் டங்ஸ்டன் திட்டத்தைக் கைவிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. திட்டங்களில் மட்டுமல்ல, தீர்க்கமான முடிவுகளை எடுத்து, சிறுபான்மையினருக்கும் அவர்களின் வரலாறு, பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் திராவிட முன்னேற்றக் கழகமே அரண் என்பதற்கான சமகால வரலாற்றுச் சான்று அரிட்டாபட்டி.



> **“நான் உயிரோடு இருக்கும் வரை, டங்ஸ்டன் சுரங்கத்தை அனுமதிக்க மாட்டேன்” என்று சட்டப் பேரவையிலேயே ஆணித்தரமாகக் கூறினார் முதலமைச்சர்.**

...நீளும்

## கமல் பேசியது தவறா?

‘தமிழில் இருந்துதான் கன்னடம் பிறந்தது’ என ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன், திரைப்பட விழா ஒன்றில் பேசியதற்காக கன்னட அமைப்புகள் அவரை விமர்சித்துக் கொண்டிருக்கின்றன, கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். “மொழி தொடர்பான ஆய்வுகளை, மொழியியல் வல்லுநர்கள் பேசட்டும் என்றும், மொழியை வைத்து அரசியலாக்க வேண்டாம்” என்றும் கமல்ஹாசன் விளக்கம் அளித்த பிறகும், ‘மன்னிப்பு கேட்கவில்லை’ என அவ்வழக்கை விசாரித்த நீதிபதியே கேட்டிருக்கிறார்.

திராவிட மொழிக் குடும்பத்தில் ஒவ்வொரு மொழிக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமை, வேற்றுமை குறித்தெல்லாம் இராபர்ட் கால்டுவெல் ஆய்வு செய்திருக்கிறார் கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்றவையே என்பதை, அவரது ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. மொழியியல் அறிஞர்கள் பலரும் இதே கருதுகோள்களை முன்வைத்துள்ளனர். ஆனால், ‘கன்னடத்தைச் சிறுமைப்படுத்த வேண்டும்’ என்கிற எண்ணத்தில் கூறியதாக, கர்நாடக பா.ஜ.க. அரசியல் செய்து வருகிறது.

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்தி, இந்தியை மூன்றாவது மொழியாகக் கற்பிக்கத் தொடங்கிய மாநிலம் கர்நாடகா. அதனால், சுமார் 90,000 குழந்தைகள் இந்திப் பாடத்தில், தோல்வியடையும் சூழல் உருவானதும், சமீபத்தில் செய்திகளாக வந்தது.

‘சமஸ்கிருதமே இந்தியாவின் தாய்மொழி’ என்று அமித் ஷா கூறியபோது தமிழ்நாட்டில் இருந்துதான் பெரும் கண்டனங்கள் எழுந்தன. அப்போதெல்லாம் எழாத கண்டனக் கணைகள், தற்போது கமல்ஹாசனுக்கு எதிராக மட்டும் கட்டமைக்கப்படுகின்றன என்று சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டில் இருந்தும் கமல்ஹாசனுக்கு எதிராக எதிர்ப்புக் கணைகளை வீசுவது, பாரதிய ஜனதா கட்சி மட்டும்தான் என்பதிலிருந்தே, இதன் பின்னால் கட்டமைக்கப்படும் அரசியலை, எவராலும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் தந்த வாழ்த்து!



எம்.சரவணன்

2011-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் எனது குடும்பத்தாருடன் சந்தித்த மகிழ்வான தருணம். அப்போது, ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளராக இருந்தேன். அன்று, என் குழந்தைகள் கைகளால் தலைவரிடம் கழக வளர்ச்சி நிதி வழங்கியது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. தலைவரின் வாழ்த்து, கழகப் பணியில் என்றென்றும் ஊக்கம் அளிக்கும் மருந்து.

**– எம்.சரவணன், இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘திராவிட நாடு’ இதழுக்கு ஜாமின்!

1948-ஆம் ஆண்டு ஏப்ரல் 4 மற்றும் 13-ஆம் தேதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய தலையங்கத்துக்காக ‘திராவிட நாடு’ இதழுக்கு, ரூ.3,000 அபராதம் விதிக்கப்பட்டது. ஜூன் 25-க்குள் ஜாமின் தொகையைக் கட்ட வேண்டும் என நிபந்தனை விதிக்கப் பட்ட நிலையில், பொதுமக்களும், ‘திராவிட நாடு’ வாசகர்களும் ஒரு அணா இரண்டு அணா என நிதி அனுப்பி உதவினர். ஒரே மாதத்தில் 3,000 ரூபாய் கட்டப்பட்டது. ‘போதும், பணம் அனுப்ப வேண்டாம்’ என்று நன்றி தெரிவித்து அண்ணா, ‘திராவிட நாடு’ இதழில் அறிக்கை வெளியிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131